செ.வெ. எண் : 1074 4/12/2010

# செய்தி வெளியீடு

தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டுவரும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களை விற்பனை செய்து வரும் தாய்ச் சங்கமான கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து 75 ஆண்டுகளுக்கு மேல் கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது.

கடந்த தீபாவளி 2010 விழாக் காலத்தை முன்னிட்டு நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக் குறியீடான ரூ.85.00 கோடிக்கும் மேலாக ரூ.88.00 கோடி அளவிற்கு விற்பனை செய்து சாதனைப் படைத்துள்ளது எதிர்வரும் பொங்கல் – 2011 பண்டிக்கைக்கு ரூ.60.00 கோடி விற்பனை குறியீடாக நிர்ணயிக்கப் பட்டு, அதனை அடைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வரும் கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கண்ணைக் கவரும் வண்ணங்களில் புத்தம் புதிய வடிவமைப்புகளுடன் புதுப் புது கைத்தறித் துணி வகைகள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

சமீப காலமாக ஆயத்த ஆடைகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் வாடிக்கையாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. வாடிக்கையாளர்களின் இத்தகைய துணி இரகங்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், கோ-ஆப்டெக்ஸ் கண்கவரும் வண்ணங்களில் அழகிய வடிவமைப்புகளில் முழுவதும் இயற்கை இழைப் பருத்தி நூல் (Organic Cotton Yarn) மற்றும் இயற்கை சாயக் கலவையினைக் (Natural Dyes)

கொண்டு தயார் செய்யப்பட்ட பிறந்த குழந்தை முதல் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆடைகள், மற்றும் விழாக்காலங்களில் பரிசாக வழங்குவதற்கு ஏற்ற துணி இரகங்களான படுக்கை விரிப்புகள், துண்டு இரகங்கள், மேஜை விரிப்புகள், பிளேஸ் மேட்ஸ், சமையலறை உபயோகிப்பு துணி இரகங்கள் மற்றும் ஆடவருக்கான பருத்தி இரக சட்டைகள் போன்ற இரகங்களை விற்பனைக்கு அறிமுகப்படுத்த உள்ளது.

இந்த புத்தம் புது துணி இரகங்களின் விற்பனைத் துவக்க விழா மாண்புமிகு தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்களால் சென்னை, எழும்பூர், பாந்தியன் சாலையில் இயங்கிவரும் கோ-ஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகையில் **06.12.2010** அன்று காலை **10.30** மணி அளவில் துவக்கி வைக்கப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் கைத்தறித் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு **ஆர். ராஜகோபால்,** இ.ஆ.ப., கைத்தறித் துறை இயக்குநர் திரு **வெ.சந்திரசேகரன்,** இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இதற்கான விழா ஏற்பாடுகளை கோ-ஆப்டெக்ஸ் முதன்மைச் செயலர் / மேலாண்மை இயக்குநர் முனைவர் **சாந்தினி கபூர்,** இ.ஆ.ப. அவர்கள் செய்து வருகிறார்கள்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9